Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

தமிழ் மக்கள் குரல்
tamilmakkalkurall@gmail.com
தினசரி காலை நாளிதழ்
RNI No. : TNTAM24840
உள்ளது உள்ளபடி

KARUNAII TRUST
அன்னை சிறப்புப் பள்ளி
Contact :
98413 59935



## நமது நாட்டில் நடுவர் நடைமுறை, வழக்கமான அமைப்புக்கு கூடுதல் சுமையாக உள்ளது - குடியரசுத் துணைத் தலைவர் திரு ஜக்தீப் தன்கர்

சென்னை, 02 மார்ச் 2025: "நமது நாட்டில் நடுவர் நடைமுறை என்பது தீர்ப்பின் வழக்கமான படிநிலை அமைப்புக்கு கூடுதல் சுமையாக உள்ளது" என்று குடியரசுத் துணைத் தலைவர் திரு ஜக்தீப் தன்கர் கூறியுள்ளார்.

புதுதில்லியில் உள்ள பாரத் மண்டபத்தில் இந்திய சர்வதேச நடுவர் மையம் ஏற்பாடு செய்திருந்த கருத்தரங்கில் சிறப்பு விருந்தினராக பங்கேற்று சிறப்புரையாற்றிய திரு தன்கர், "நடுவர் செயல்முறையுடன் தொடர்புடைய வழக்குரைஞர்களின் உறுப்பினர்களைப் போலவே நடுவர்களும் முக்கிய பங்கு வகிக்கின்றனர் என்றார்.

நாட்டில் ஒவ்வொரு அம்சத்திலும் வளமான மனித வளம் உள்ளது என்று அவர் கூறினார். சர்ச்சைகள் துறை சார்ந்த அனுபவத்துடன் தொடர்புடையவை என அவர் தெரிவித்தார். துரதிர்ஷ்டவசமாக, இந்த நாட்டில் மத்தியஸ்தம் என்பது தீர்ப்பு என்பது போல மிகவும் குறுகிய பார்வையை நாம் கொண்டுள்ளோம் என அவர் கூறினார். இது தீர்ப்புக்கு அப்பாற்பட்டது எனவும் இது உலக அளவில் வரலாற்று ரீதியாக மதிப்பிடப்பட்ட வழக்கமான தீர்ப்பு அல்ல என்றும் அவர் கூறினார்.

நடுவர் தீர்ப்பில் துறைசார் வல்லுநர்களின் பங்களிப்பின் அவசியத்தை திரு தன்கர் வலியுறுத்தினார். நடுவர் செயல்பாட்டில் ஓய்வுபெற்ற நீதிபதிகள் பங்கேற்பதை அவர் குறிப்பிட்டார். இந்த நாட்டின் ஓய்வு பெற்ற நீதிபதிகள் நடுவர் செயல்முறைக்கு சொத்து என அவர் குறிப்பிட்டார்.

உலக அளவில் ஒவ்வொரு துறையிலும் இந்தியா வளர்ந்து வரும் நேரம் இது என்று அவர் கூறினார். உலகளாவிய தகராறு தீர்வு மையமாக இந்தியா ஏன் உருவாகக்கூடாது என்று அவர் கேள்வி எழுப்பினார். ஒவ்வொரு பொருளாதார நடவடிக்கையிலும் வேறுபாடுகள், சர்ச்சைகள் இருக்கும் எனவும் விரைவான தீர்வுகள் தேவைப்படும் என்றும் அவர் தெரிவித்தார். இந்த சூழ்நிலையில் தீர்ப்பளிப்பதில் கவனம் செலுத்துவது மிகவும் முக்கியமானது என்று திரு ஜக்தீப் கூறினார்.

## என்சிஎல் நிறுவனம் குடும்பத் தலைவிகளை முதலுதவி அளிப்பவர்களாக மாற்றுகிறது

சென்னை 02, மார்ச் 2025 : கோல் இந்தியா லிமிடெட்டின் துணை நிறுவனமான நார்தர்ன் கோல்ஃபீல்ட்ஸ் லிமிடெட் (என்சிஎல்), மிகவும் இயந்திரமயமாக்கப்பட்ட சுரங்கங்களுக்கும், நாட்டின் எரிசக்தி பாதுகாப்பை உறுதி செய்வதில் முக்கிய பங்கு வகிப்பதற்கும் பெயர் பெற்றது. இது பெரிய அளவில் குடும்பத் தலைவிகளுக்கான முதலுதவி பயிற்சித் திட்டத்தை' அறிமுகப்படுத்தியுள்ளது. முதலுதவி பற்றிய விழிப்புணர்வை பணியிடத்திற்கு அப்பால், பணியாளர்களின் வீடுகளுக்கும் விரிவுபடுத்துவதன் மூலம், என்சிஎல் நிறுவனம், தயார்நிலை கலாச்சாரத்தை வலுப்படுத்துகிறது. இந்த முயற்சி மூலம் ஜூன் 2025 க்குள் என்சிஎல் மூலம் 8,000 இல்லத்தரசிகள் முதலுதவி அளிப்பவர்களாக மாற்றப்படுவார்கள்.

26 ஜனவரி 2025 அன்று தொடங்கப்பட்ட இல்லத்தரசிகளுக்கான முதலுதவி பயிற்சித் திட்டத்தில், ஒரு மாதத்தில், பல்வேறு அமர்வுகளில் சுமார் 1,500 இல்லத்தரசிகளுக்கு வெற்றிகரமாக பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் குடும்பங்களின் நலன், ஆரோக்கியத்தை மேம்படுத்துகிறது. அதே நேரத்தில் மருத்துவர்களின் சுமையைக் குறைக்கிறது.

இல்லத்தரசிகள் பெரும்பாலும் வீட்டில் மருத்துவ அவசரநிலைகளுக்கு முதலில் உதவி அளிப்பவர்கள் என்பதால், சிக்கலான சூழ்நிலைகளில் உடனடியாகவும் திறம்படவும் செயல்படுவதற்கான அறிவையும் நம்பிக்கையையும் அவர்களுக்கு வழங்கும் வகையில் இந்தப் பயிற்சித் திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த திட்டம் நடைமுறை திறன்களையும் விழிப்புணர்வையும் வலியுறுத்துகிறது.

தீக்காயங்கள், வெட்டுக்கள், மூச்சுத் திணறல், விஷம், சிறிய காயங்கள், வெப்பம் தொடர்பான வியாதிகள், இதய நுரையீரல் புத்துயிர் (சிபிஆர்) உள்ளிட்ட பொதுவான மருத்துவ சூழ்நிலைகளை நிர்வகிக்க நடைமுறை அறிவுடன் இல்லத்தரசிகளுக்கு பயிற்சி அளிப்பதை இந்த திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது. என்சிஎல்-ன் உள்ளக மருத்துவ நிபுணர்களால் நடத்தப்படும் இந்த பயிற்சி, பங்கேற்பாளர்களின் நம்பிக்கையையும் திறனையும் மேம்படுத்துகிறது. சமூக நலன், பெண்கள் தலைமையிலான வளர்ச்சிக்கான என்சிஎல்-ன் அர்ப்பணிப்பு இந்த பெரிய அளவிலான முயற்சியின் மூலம் தெளிவாகிறது.

## என்எக்ஸ்டி மாநாட்டில் முக்கிய பிரமுகர்களை பிரதமர் சந்தித்து உரையாடினார்

சென்னை 02, மார்ச் 2025 : பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று புதுதில்லி பாரத மண்டபத்தில் உள்ள என்எக்ஸ்டி மாநாட்டில் பல்வேறு முக்கிய பிரமுகர்களை சந்தித்து உரையாடினார். இந்தப் பிரமுகர்கள் பட்டியலில் திரு. கார்லோஸ் மான்டெஸ், பேராசிரியர் ஜொனாதன் ஃப்ளெமிங், டாக்டர் ஆன் லிபர்ட், பேராசிரியர். வெவெசெலின் போபோவ்ஸ்கி, டாக்டர் பிரையன் கிரீன், திரு. அலெக் ரோஸ், திரு. ஒலெக் ஆர்டெமியேவ், திரு. மைக் மாசிமினோ ஆகியோர் அடங்குவர்.



இது தொடர்பான பதிவுகளில் அவர் குறிப்பிட்டுள்ளதாவது;

"திரு கார்லோஸ் மான்டெஸ் உடன் இன்று என்எக்ஸ்டி மாநாட்டில் கலந்துரையாடினேன். சமூகப் புதுமைகளை மேம்படுத்துவதில் அவர் சிறந்த பங்களிப்பைச் செய்துள்ளார். டிஜிட்டல் தொழில்நுட்பம், நிதிநுட்பம் மற்றும் பலவற்றில் இந்தியாவின் முன்னேற்றங்களை அவர் பாராட்டினார்''.

"எம்ஐடி ஸ்லோன் ஸ்கூல் ஆஃப் மேனேஜ்மென்ட்டுடன் தொடர்புடைய பேராசிரியர் ஜொனாதன் ஃப்ளெமிங்கைச் சந்தித்தேன். பொது மற்றும் தனியார் துறைகளில் வாழ்க்கை அறிவியலில் அவரது பணி முன்னுதாரணமானது. இந்தத் துறையில் வரவிருக்கும் திறமை மற்றும் புதுமைகளுக்கு வழிகாட்டுவதற்கான அவரது ஆர்வம் ஊக்கமளிக்கிறது''.

"டாக்டர் ஆன் லிபர்ட்டைச் சந்தித்ததில் மகிழ்ச்சி. பார்கின்சன் நோய்க்கு சிகிச்சையளிப்பதில் அவரது பணி பாராட்டுக்குரியது. வரும் காலங்களில் பலருக்கு சிறந்த வாழ்க்கைத் தரத்தை அது உறுதி செய்யும்''.

"பேராசிரியர் வெசெலின் போபோவ்ஸ்கி உடனான சந்திப்பு மகிழ்ச்சியளிக்கிறது. வேகமாக மாறிவரும் உலகில் சர்வதேச உறவுகள் மற்றும் புவிசார் அரசியல் பற்றிய புரிதலை ஆழப்படுத்துவதில் அவர் பாராட்டத்தக்க பணியைச் செய்துள்ளார்''.

"இயற்பியல் மற்றும் கணிதத்தின் மீது மிகுந்த ஆர்வம் கொண்ட ஒரு முன்னணி கல்வியாளரான டாக்டர் பிரையன் கிரீனை சந்தித்ததில் மகிழ்ச்சி. அவரது படைப்புகள் பரவலாகப் போற்றப்படுகின்றன. வரும் காலங்களில் கல்வி விரிவுரையை அவை வடிவமைக்கும்''

"இன்று திரு அலெக் ரோஸைச் சந்தித்ததில் மகிழ்ச்சி. புதுமை மற்றும் கற்றல் தொடர்பான அம்சங்களை வலியுறுத்தும் ஒரு சிறந்த சிந்தனையாளர் மற்றும் எழுத்தாளராக அவர் முத்திரை பதித்துள்ளார்''.

"ரஷ்யாவைச் சேர்ந்த முன்னணி விண்வெளி வீரர் திரு ஒலெக் ஆர்டெமியேவ்-ஐச் சந்தித்ததில் மகிழ்ச்சி. சில முன்னோடி பயணங்களில் அவர் முன்னணியில் இருந்துள்ளார். அவரது சாதனைகள் பல இளைஞர்களை அறிவியல் மற்றும் விண்வெளி உலகில் பிரகாசிக்கத் தூண்டும்''

"சிறந்த விண்வெளி வீரரான திரு. மைக் மாசிமினோவைச் சந்தித்ததில் மகிழ்ச்சி அடைகிறேன், விண்வெளியில் அவருக்கு இருந்த ஆர்வத்தை இளைஞர்கள் மத்தியில் பிரபலமாக்குவது பரவலாக அறியப்படுகிறது. கற்றல் மற்றும் புதுமைகளை மேம்படுத்துவதில் அவர் எவ்வாறு பணியாற்றுகிறார் என்பதும்

## உலக மொபைல் மாநாடு -2025 ல், உலக அரங்கில் இந்தியாவின் எழுச்சியைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறார் திரு ஜோதிராதித்ய சிந்தியா

சென்னை 02, மார்ச் 2025 : ஸ்பெயின் நாட்டின் யூார்சிலோனாவில் மார்ச் 3-6, 2025 வரை நடைபெறவுள்ள உலகின் மிகப்பெரிய மற்றும் மிகவும் செல்வாக்குமிக்க தொழில் நுட்பம் மற்றும் தொலைத்தொடர்பு நிகழ்வுகளில் ஒன்றான, உலக மொபைல் மாநாடு- 2025 -ல், மத்திய தொலைத் தொடர்புத் துறை அமைச்சர் திரு ஜோதிராதித்ய சிந்தியா, இந்தியாவின் சார்பில் கலந்து கொள்கிறார்.

இந்தியா மொபைல் மாநாடு- 2025-ன் முன்னோட்ட நிகழ்ச்சியை அவர் வெளியிடுவதுடன், உலக மொபைல் மாநாட்டில் இந்தியாவின் அரங்கையும் திறந்து வைப்பார்.

இந்தியா மொபைல் மாநாடு என்பது இந்தியாவின் கண்டுபிடிப்பு சூழல் அமைப்பை முன்னிலைப் படுத்தும் தளமாகும், மேலும் முன்னணி தொலைத் தொடர்பு நிறுவனங்கள் மற்றும் கண்டுபிடிப்பாளர்கள் தங்கள் அதிநவீன முன்னேற்றங்கள் மற்றும் நிலையான தீர்வுகளை இதில் காட்சிப்படுத்துகின்றனர். இந்திய அரங்கில் 38 இந்திய தொலைத்தொடர்பு உபகரண உற்பத்தியாளர்கள் தங்களின் அதிநவீன தயாரிப்புகளான வன்பொருள், மென்பொருள் ஆகிய இரண்டையும் காட்சிப் படுத்துவார்கள்.

அமைச்சரின் பங்கேற்பானது டிஜிட்டல் மற்றும் மொபைல் சூழல் அமைப்பில் உலகளாவிய தலைவராக இந்தியாவின் வளர்ந்து வரும் பங்கை எடுத்துக் காட்டுகிறது. அவரது பங்கேற்பு டிஜிட்டல் மாற்றம், புத்தாக்கம், தொலைத் தொடர்பு மற்றும் தொழில் நுட்பத்தில் சர்வதேச ஒத்துழைப்பை வளர்ப்பதில் இந்தியாவின் உறுதிப்பாட்டை எடுத்துக்காட்டும்.

5ஜி, செயற்கை நுண்ணறிவு, 6ஜி, குவாண்டம் மற்றும் அடுத்த தலைமுறை மொபைல் தொழில் நுட்பங்களில் அதிநவீன முன்னேற்றங்களை ஆராய்வதற்காக, தமது பயணத்தின் போது, தொலைத்தொடர்பு அமைச்சர், உலகளாவிய தொழில்துறை தலைவர்கள், கொள்கை வகுப்பாளர்கள் மற்றும் கண்டுபிடிப்பாளர்களுடன் உரையாடுவார். இந்த நிகழ்வு மொபைல் துறையை வடிவமைக்கும் முக்கிய போக்குகளை விவாதிப்பதற்கான ஒரு தளமாகச் செயல்படுவதுடன், இந்தியாவின் டிஜிட்டல் விருப்பங்களை நிறைவேற்றும்.

அமைச்சர் ஜோதிராதித்யா சிந்தியா தமது பயணம் குறித்து, "இந்தியா வேகமாக உலகளாவிய தொழில் நுட்ப மையமாக உருவாகி வருகிறது. மேலும் உலக மொபைல் மாநாடு போன்ற நிகழ்வுகளில் சர்வதேச கூட்டாளர்களுடனான எங்கள் ஈடுபாடு புதுமைகளை விரைவுபடுத்துவதற்கும், டிஜிட்டல் உள்கட்டமைப்பை வலுப்படுத்துவதற்கும் முக்கியமானது. உலகளாவிய நிபுணர்களுடன் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்வதற்கும், மொபைல் மற்றும் தொலைத்தொடர்புத் துறையில் ஒத்துழைப்பதற்கான வாய்ப்புகளைப் பற்றி விவாதிப்பதற்கும் நான் எதிர்நோக்குகிறேன்'' என்று தெரிவித்தார்.

'உலகளாவிய தொழில்நுட்ப நிர்வாகம்', 'புதுமை மற்றும் ஒழுங்குமுறையை சமநிலைப்படுத்துதல்: தொலைத் தொடர்பு கொள்கை மீதான உலகளாவிய பார்வைகள்' உள்ளிட்ட பல முக்கிய அமர்வுகளில் அமைச்சர் உரையாற்றுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

பார்சிலோனாவில் நடக்கும் உலக மொபைல் காங்கிரஸ் 2025-ல் பங்கேற்பது, உலகெங்கிலும் உள்ள உயர்மட்ட நிர்வாகிகள், தொலைநோக்கு பார்வையாளர்கள் மற்றும் கண்டுபிடிப்பாளர்களை ஒன்றிணைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இது உத்திசார் ஒத்துழைப்பு, அறிவு பரிமாற்றம் மற்றும் இந்தியாவின் தொழில் நுட்பத் தலைமையை வெளிப்படுத்துவதற்கான தளத்தை வழங்குகிறது.

## ஏப்ரல் 2024 முதல் பிப்ரவரி 2025 வரை ஒட்டுமொத்த நிலக்கரி உற்பத்தி 5.73% வளர்ச்சியடைந்து 928.95 மில்லியன் டன்னை எட்டியது

சென்னை 02, மார்ச் 2025 : பிப்ரவரி 2025 வரை உற்பத்தி மற்றும் அனுப்புதல் ஆகிய இரண்டிலும் குறிப்பிடத்தக்க வளர்ச்சியுடன் இந்தியாவின் நிலக்கரித் துறை அதன் வலுவான செயல்திறனைத் தொடர்கிறது.

ஒட்டுமொத்த நிலக்கரி உற்பத்தி 928.95 மில்லியன் டன்களை ) எட்டியுள்ளது, இது கடந்த ஆண்டு இதே காலகட்டத்தில் 878.55 மில்லியன் டன்னுடன் சூப்பிடும் போது 5.73% அதிகரிப்பாகும்.

அதேபோல், ஒட்டுமொத்த நிலக்கரி அனுப்புதல் 929.41 மெட்ரிக் டன்னாக உயர்ந்துள்ளது, இது முந்தைய ஆண்டில் 880.92 மெட்ரிக் டன்னிலிருந்து 5.50% வளர்ச்சியைக் குறிக்கிறது.

இந்த வலுவான செயல் திறன், எரிசக்தி பாதுகாப்பு மற்றும் தொழில்துறை வளர்ச்சிக்கான இந்தியாவின் உறுதிப்பாட்டை வலுப்படுத்துகிறது. நாடு அதிகரித்து வரும் தேவையை திறமையாக பூர்த்தி செய்வதை உறுதி செய்கிறது. உள்கட்டமைப்பு மேம்பாடு மற்றும் செயல்பாட்டுத் திறன்களை அரசு தொடர்ந்து இயக்கி வருகிறது. வரும் மாதங்களில் இந்த நேர்மறையான வேகத்தைத் இது தக்கவைக்கிறது.

## டெசர்ட் ஹண்ட் போர்ப் பயிற்சி 2025

சென்னை 02, மார்ச் 2025 : 2025 பிப்ரவரி 24 முதல் 28 வரை ஜோத்பூர் விமானப் படை நிலையத்தில் இந்திய விமானப் படையால் "எக்சர்சைஸ் டெசர்ட் ஹண்ட் 2025" என்று பெயரிடப்பட்ட ஒருங்கிணைந்த முப்படை சிறப்புப் பயிற்சி நடத்தப்பட்டது. இந்த பயிற்சியில் இந்திய ராணுவத்தின் சிறப்புப் படைகள், இந்திய கடற்படையின் கமாண்டோக்கள், இந்திய விமானப் படையின் கருட் சிறப்புப் படையினர் இணைந்து பங்கேற்றனர்.

பாதுகாப்பு சவால்களை எதிர்த்து விரைவான செயல்பாடுகளை உறுதி செய்வதற்காக மூன்று சிறப்புப் படை பிரிவுகளிடையே செயல்திறன், ஒருங்கிணைப்பு ஆகியவற்றை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட பயிற்சி இதுவாகும். இந்த பயிற்சியில் வான் வழி நடவடிக்கைகள், துல்லி தாக்குதல்கள், பிணைக் கைதிகள் மீட்பு, பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகள் உள்ளிட்ட பல நடைமுறைகள் அடங்கும். இதில் படைகளின் போர் தயார்நிலையும் சோதிக்கப்பட்டது.மூத்த அதிகாரிகள் பயிற்சியை மேற்பார்வையிட்டனர். மேலும், முப்படைகளுக்கு இடையேயான தடையற்ற ஒத்துழைப்பு மூலம் தேசிய பாதுகாப்பை வலுப்படுத்த இந்திய ஆயுதப் படைகளின் உறுதிப்பாட்டை வளர்ப்பதற்கான ஒரு தளத்தை இது வழங்கியது.

# "தனித்துவமான கிரைம் இன்வெஸ்டிகேஷன் திரில்லர் கதைக்களம் 'அஸ்திரம்'' ; நடிகர் ஷாம் நம்பிக்கை.

சென்னை 02, மார்ச் 2025: பெஸ்ட் மூவிஸ் சார்பில் தன சண்முகமணி தயாரிப்பில் கிரைம் இன்வெஸ்டிகேஷன் திரில்லராக உருவாகியுள்ள படம் 'அஸ்திரம்'. ஷாம் கதாநாயகனாக நடித்துள்ள இந்தப் படத்தை அறிமுக இயக்குநர் அரவிந்த் ராஜகோபால் இயக்கியுள்ளார். கதாநாயகியாக மாடலிங் துறையை சேர்ந்த நிரா நடிக்க முக்கிய வேடங்களில் நிழல்கள் ரவி, ஜீவா ரவி, அருள் டி.சங்கர் மற்றும் அறிமுக நடிகர் ரஞ்சித் ஆகியோர் நடித்துள்ளார்கள்.



வரும் மார்ச்-7ஆம் தேதி இந்தப்படம் தமிழகமெங்கும் வெளியாகிறது. இதையடுத்து 'அஸ்திரம்' படக் குழுவினர் பத்திரிகை யாளர்களை சந்தித்து படம் குறித்த சுவாரஸ்யமான தகவல்களை பகிர்ந்து கொண்டனர்.

நாயகன் ஷாம் பேசும்போது,

"பேஸ்புக் மூலம் எனக்கு அறிமுகமான அரவிந்த் ராஜகோபால் நான் படம் இயக்கப் போகிறேன் அதில் நீங்கள் நடித்தால் நன்றாக இருக்கும் என என்னை தொடர்பு கொண்டார். அதன் பின் அரவிந்த், கதாசிரியர் ஜெகன் இருவரும் என்னை நேரில் சந்தித்தனர். அவர்கள் சொன்ன கதை ரொம்பவே சுவாரசியமாக இருந்தது. இதுவரை பல த்ரில்லர் படங்களை ரசித்து பார்த்து உள்ளோம். இந்தப் படத்தில் ஒரு தனித்துவமான கிரைம் இன்வெஸ்டிகேஷன் கதையை திரில்லர் வடிவத்தில் கொடுத்தது மற்ற படங்களில் இருந்து இதை வித்தியாசப் படுத்துகிறது. இதன் திரைக்கதையும் சுவாரசியமாக இருந்தது.

இயக்குநர் அரவிந்த் டைரக்சனுக்கு புதியவர் என்றாலும் சினிமாவில் பல வருடங்களாக பணியாற்றிய அனுபவம், சில படங்களில் நடித்த அனுபவம் எல்லாமே அவரிடம் இருந்தது. அவரது பேச்சிலும் தன்னம்பிக்கை தெரிந்தது. இந்த படத்தின் தயாரிப்பாளர் ஈரோட்டை சேர்ந்தவர். கடுமையாக உழைத்து முன்னேறியவர். இந்த படத்தில் நான் நடிக்க வேண்டும் என கேட்டுக் கொண்டவர், இந்த படத்தின் படப்பிடிப்பு கொடைக்கானலில் ஒரே கட்டமாக ஆக 30 நாட்கள் நடைபெற இருப்பதால் மொத்தமாக தேதிகளை வழங்கினால் நன்றாக இருக்கும் என கேட்டுக் கொண்டார்.

புது இயக்குநர் என்பதால் 15 நாட்களாக பிரித்து படப்பிடிப்பை நடத்தலாமே என்று கூட நான் சொன்னேன். ஆனால் இயக்குநர் மீது எனக்கு நம்பிக்கை இருக்கிறது. அது மட்டுமல்ல எந்த வித பிரச்சனைகளாலும் படம் நின்று விடக் கூடாது என்பதற்காகத் தான் என் சொந்த பணத்தை மட்டுமே வைத்து படம் எடுக்கிறேன் என நம்பிக்கையுடன் கூறினார். அவர் கூறியது எனக்கு கொஞ்சம் அதிர்ச்சியாகவும் அதே சமயம் ஆச்சரியமாகவும் இருந்தது. சொந்தப் பணம் போட்டு படம் எடுப்பவர்கள் சினிமாவில் ரொம்பவே குறைவானவர்கள் தான். அதனால் தான் இந்த படம் திட்டமிட்டபடி எந்த தடங்கலும் இன்றி அழகாக நிறைவு பெற்று இப்போது ரிலீசுக்கு தயாராகியுள்ளது.

இயக்குநர் அரவிந்த் கார்ப்பரேட் நிறுவனத்தில் பணியாற்றி வந்த தன்னுடைய வேலையை விட்டு விட்டு சினிமா மீது இருந்த ஆர்வத்தால் இந்த படத்தை பண்ணுகிறார் என்பதை உணர்ந்து கொண்டு அவரிடம் உதவி இயக்குநர்களாக பணியாற்றிய அவருடைய நண்பர்கள் அனைவரும் அவருக்கு மிகுந்த ஒத்துழைப்பு கொடுத்தார்கள். அப்படி ஒரு பிரண்ட்ஷிப்பை இப்போதுதான் நான் சந்திக்கிறேன். அரவிந்த் அந்த வகையில் ரொம்பவே லக்கி என்று சொல்லலாம். அதே போல படப்பிடிப்பின் முதல் நாளில் இருந்து ஒரு அனுபவமிக்க இயக்குநர் போலவே எல்லாவற்றையும் அழகாக கையாண்டார் அரவிந்த்.

வாரிசு திரைப்படம் எனக்கு ஒரு கம் பேக் படமாக அமைந்தது. அதற்கு பிறகு வெளியாகும் படம் என்பதால் இந்த 'அஸ்திரம்' படம் எனக்கு மிக முக்கியமான படம். இந்த படத்தின் கதையை எழுதியுள்ள ஜெகன் பார்ப்பதற்கு சிறியவராக தோன்றினாலும் சினிமா பற்றிய அறிவு மிகுதியாக உள்ளவர். படம் என்ன கேட்கிறதோ அதை மட்டுமே, அழகாக திரைக்கதையாக எழுதியுள்ளார். ஒரு அற்புதமான மெசேஜும் இந்த படத்தில் இருக்கிறது. படம் பார்க்கும் அனைவருமே அதை மனதார ஒப்புக் கொள்வார்கள். இந்த படத்தில் நடித்துள்ள ரஞ்சித் இதில் அறிமுகமாகி இருக்கிறார். கிட்டத்தட்ட 20 நாட்கள் ஒர்க்ஷாப்பில் கலந்து கொண்டு படப்பிடிப்பில் எந்தவித தயக்கமும் குழப்பமும் இன்றி அழகாக நடித்துள்ளார். நடிகர் ஜீவா ரவியும் இந்த படத்தில் தான் நடித்துள்ள ஜேம்ஸ் கதாபாத்திரத்தை அவ்வளவு அழகாக வெளிப்படுத்தி இருக்கிறார்.

கதாநாயகி நிரா மாடலிங் மற்றும் விளம்பர படங்களில் நடித்த அனுபவம் கொண்டவர். 'நீ போதும்' என்கிற ஒரு மியூசிக் ஆல்பத்தில் அவரை பார்த்தபோது இவர் நமது படத்திற்கு சரியாக இருப்பார் என அரவிந்திடம் கூறினேன். அதற்கேற்ற மாதிரி படத்திலும் நிரா சிறப்பான பங்களிப்பை கொடுத்துள்ளார். இந்த படத்திற்கு பிறகு அவர் ஒரு பிசியான ஹீரோயினாக மாறுவார். படத்தில் பணியாற்றிய அனைவரிடமும் பாசிட்டிவான எண்ணங்களே அதிகம் இருந்தன. அதை படத்தில் நடித்த ஒவ்வொரு கணமும் உணர முடிந்தது. ஒளிப்பதிவாளர் கல்யாண் மிக சிறப்பாக ஒளிப்பதிவு செய்திருக்கிறார்" என்று கூறினார்.

இயக்குநர் அரவிந்த் ராஜகோபால் பேசும்போது,

"கார்ப்பரேட் நிறுவனத்தில் பணியாற்றி விட்டு சில குறும்படங்கள் இயக்கி, சில திரைப்படங்களில் நடித்தும் இந்த பத்து வருட பயணத்தில் ஒரு இயக்குநராக இங்கே அமர்ந்திருப்பது ஒரு கனவு போல தான் இருக்கிறது. அதே சமயம் எனக்கு குறும்படம் அனுபவம் மட்டுமே இருக்கிறது என்று தெரிந்தும் கூட புதிய இயக்குனர்களை உருவாக்க வேண்டும் என்கிற ஆர்வம் கொண்ட தயாரிப்பாளர் தன சண்முகமணி என் மீது நம்பிக்கை வைத்து இந்த கதையை கேட்டதும் படம் தயாரிக்க ஒப்புக் கொண்டார். இந்த படத்தின் கதையை ஒரு சில ஹீரோக்களிடம் சொல்ல ஆறு மாதம் அலைந்த நிலையில், சோசியல் மீடியாவில் நான் அனுப்பிய ஒரு மெசேஜை பார்த்து விட்டு என் மீது நம்பிக்கை வைத்து என்னை அழைத்து கதை கேட்டு படத்தில் நடிக்க சம்மதம் தெரிவித்து அடுத்த கட்டத்திற்கு நகர்த்தி சென்றதில் நடிகர் ஷாமுக்கு மிகப்பெரிய பங்கு உண்டு. படத்தின் கதாநாயகி நிரா, நடிகர் நிழல்கள் ரவி, ஜீவா ரவி, அரெளல் டி ஷங்கர் ஆகியோர் எந்த வித எதிர்பார்ப்பும் இல்லாமல் இந்த படத்தில் எங்கள் மீது நம்பிக்கை வைத்து தங்களுடைய சிறந்த பங்களிப்பை கொடுத்துள்ளார்கள்.

ஒளிப்பதிவாளர் கல்யாண் சிறந்த பங்களிப்பை கொடுத்துள்ளார்கள். இசையமைப்பாளர் சுந்தரமூர்த்தி பின்னணி இசையில் புதுமையை கையாண்டிருக்கிறார். மேலும் எடிட்டர் பூபதி எடிட்டிங்கில் மேஜிக் செய்து இருக்கிறார்." என்றார்.

# நடிகர் விமல் நடிப்பில் உருவாகி வரும் 'ஓம் காளி ஜெய் காளி' டீசரை ஜியோஹாட்ஸ்டார் வெளியிட்டுள்ளது!

சென்னை, 01 மார்ச் 2025: வித்தியாசமான கதாபாத்திரங்கள் மற்றும் கதைக்களத்தில் மிரட்டி வரும் நடிகர் விமல் தற்போது காளி அவதாரம் எடுத்திருக்கிறார். விமலின் இந்த சக்திவாய்ந்த காளி அவதாரம் கதைக்கு பெரும் பலம் சேர்த்து கதையின் தீவிரத்தை அதிகமாக்கியுள்ளது. அநீதிக்கும் நீதிக்கும் இடையிலான இந்த பயணத்தில் அவரது இந்த காளி அவதாரம் ரசிகர்களை நிச்சயம் கவரும்.

ஆக்ஷன், பழிவாங்குதல் மற்றும் கலாச்சாரத்தை பிரதிபலிக்கும் வகையில் 'ஓம் காளி ஜெய் காளி' அமைந்துள்ளது. கு'சேகரபட்டினத்தில் நடந்த தசரா திருவிழாவில் இந்தக் கதை படமாக்கப் பட்டுள்ளது கதை மீதான நம்பகத் தன்மையை இன்னும் அதிகரிக்கிறது. கொண்டாட்டங்களின் பிரமாண்டமும், காளி நடனமும் கதைக் களத்தை வடிவமைப்பதில் முக்கிய பங்கு வகிக்கிறது. 'ஓம் காளி ஜெய் காளி' ஜியோஹாட்ஸ்டாரில் மட்டும் ஒளிபரப் பாகும். ரூடிகர்கள்: விமல், சீமா பிஸ்வாஸ், ஸிஷி சிவாஜி, நிவி குமார், குமரவேல், கஞ்சா கருப்பு, புகழ், பாவ்னி, ஷிவின், க்வின்சி மற்றும் பலர்.




தொழில்நுட்பக் குழுவினர்: இசையமைப்பாளர்: கார்த்திக் ராஜா, விஷூவல் எஃபெக்ட்: ஸ்ரீ விஷூவல் எஃபெக்ட், விஎஃப்எக்ஸ்: ஃபோகஸ் விஎஃப்எக்ஸ், கலரிஸ்ட்: எஸ். மாதேஸ்வரன், ஆக்ஷன் கொரியோ கிராஃபர்: கே. ''ராஜசேகர், ஒலி வடிவமைப்பாளர்: சுதர்சனன், அனிதா, திரைக்கதை: ராமு செல்லப்பா, குமரவேல், வசனம்: ராமு செல்லப்பா, பாடல் வரிகள்: மணி அமுதவன், தயாரிப்பு வடிவமைப்பாளர்: க்ராஃபோர்ட்,

# நீரிழிவு சிகிச்சையில் கேம் சேஞ்சராக மாறும் சென்னை க்ளெனீகில்ஸ் ஹாஸ்பிடல் நீரிழிவு சிகிச்சைக்கான சிறப்பு கிளப் துவக்கம்

சென்னை 02, மார்ச் 2025: நீரிழிவு நோயாளிகளுக்கான சிறப்பு சிகிச்சை மற்றும் அது குறித்த விஸீப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் க்ளெனீகில்ஸ் ஹாஸ்பிடல் சென்னை, நீரிழிவு சிறப்பு கிளப்பை திறந்துள்ளது. இந்த கிளப்பை க்ளெனீகில்ஸ் மருத்துவமனையின் சென்னை மற்றும் ஐதராபாத் கிளஸ்டர் தலைமை நிர்வாக அதிகாரி டாக்டர் நாகேஸ்வர் ராவ் மற்றும்உள் மருத்துவம் மற்றும் நீரிழிவு மருத்துவத் துறையின் தலைவர் மற்றும் மூத்த ஆலோசகர் டாக்டர் அஸ்வின் கருப்பன் ஆகியோர் முன்னிலையில் நடிகர் எஸ்.வி. சேகர் திறந்து வைத்தார். மேலும் நீரிழிவு நோய் குறித்து பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்து வதற்கான பிரத்யேக கால் சென்டர் எண்ணையும் அவர் அறிமுகம் செய்து வைத்தார்.




இந்த கிளப் நோயாளிகளுக்கு நீரிழிவு குறித்த விழிப்புணர்வு, பிரத்யேக நீரிழிவு உதவி எண்ணை தொடர்பு கொள்ளுதல், சிறப்பு மருத்துவ சிகிச்சைகள், இலவச வருடாந்திர மருத்துவ பரிசோதனைகள் உள்ளிட்ட பல்வேறு நன்மைகளை வழங்க உள்ளது. நீரிழிவு சிகிச்சையில் சமீபத்திய முன்னேற்றங்கள் மற்றும் தொழில் நுட்பத்துடன் தனிநபர் ஆரோக் கியத்தில் இந்த கிளப் மிகுந்த கவனம் செலுத்தும். மேலும் இதன் கால் சென்டர், இளைஞர்களிடையே ஆரோக்கியமான வாழ்க்கை முறை குறித்தும், நீரிழிவு நோய்க்கு முந்தைய தடுப்பு மற்றும் நீரிழிவு மேலாண்மை குறித்த விழிப்புணர்வையும் ஏற்படுத்தும்.

இது குறித்து டாக்டர் அஸ்வின் கருப்பன் கூறுகையில், தற்போது 10 கோடிக்கும் அதிகமான இந்தியர்கள் நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர், மேலும்13.6 கோடி பேர் நீரிழிவுக்கு முந்தைய நிலையில் இருப்பதால், இந்தியா உலகின் நீரிழிவு தலைநகராக உருவெடுத் துள்ளது. நகர மயமாக்கல், மரபணு முன்கணிப்பு மற்றும் வாழ்க்கை முறை மாற்றங்கள் ஆகிய வற்றின் காரணமாக நீரிழிவு நோய் அதிகரித்து வருகிறது. பலர் தங்களுக்கு நீரிழிவு இருப்பது குறித்து அறியாமல் உள்ளனர். இதன் காரணமாக நீரிழிவை ஆரம்ப நிலையிலேயே கண்டறிய முடியாமல் போகிறது. வழக்கமான மருத்துவ பரிசோதனை மற்றும் ஆரம்பகால சிகிச்சைகள் நீரிழிவு நோயை கட்டுப் பாட்டிற்குள் வைத்திருக்க மிகவும் முக்கியமானதாகும். எனவே நீரிழிவு சிகிச்சையில் உள்ள இடைவெளியைக் குறைக்கும் வகையில் எங்களின் நீரிழிவு சிறப்பு கிளப் துவக்கப் பட்டுள்ளது என்று தெரிவித்தார்.

நீரிழிவு நோயை நிர்வகிப்பதில் நோயாளி ஈடுபாடும் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது என்று கூறிய அவர் "நீரிழிவு நோயை மருந்துகளால் மட்டும் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்க இயலாது. அது குறித்த விழிப்புணர்வு மற்றும் வாழ்க்கை முறை மாற்றம் ஆகியவையும் மிகவும் முக்கியமானதாகும். எங்களின் இந்த கிளப் நீரிழிவு நோயாளிகளுக்கு சிறப்பு சிகிச்சையை வழங்குவதோடு, அவர்கள் தங்கள் நிலையை திறம்பட நிர்வகிக்க சிறந்த மருத்துவ ஆலோசனை, தொழில்நுட்பம், அவர்களுக்கான ஆதரவு ஆகியவற்றுக்கு உறுதி அளிக்கிறது'' என்றும் யூரிவித்தார். க்ளெனீகில்ஸ் ஹாஸ்பிடல் சென்னை மற்றும் ஐதராபாத் கிளஸ்டர் தலைமை நிர்வாக அதிகாரி டாக்டர் நாகேஸ்வர் ராவ் கூறுகையில், அதிநவீன தொழில் நுட்பம், நிபுணத்துவம் வாய்ந்த மருத்துவ வல்லுனர் குழுவுடன் நோயாளிகளுக்கு சிறப்பான சிகிச்சை அளிப்பதன் மூலம் உயர்தர சுகாதாரப் பராமரிப்பை வழங்குவதில் நாங்கள் எப்போதும் முன்னுரிமை அளித்து வருகிறோம். அந்த வகையில் எங்களின் புதிய நீரிழிவு சிறப்பு கிளப் துவக்கப் பட்டு உள்ளது.இது மருத்துவ சிகிச்சையை அனைவரும் எளிதாக அணுகக் கூடியதாகவும், அவர்கள் முன்னெச் சரிக்கையுடன் செயல் படுவதற்குமான எங்கள் உறுதிப்பாட்டை பிரதிபலிக்கும் வகையில் உள்ளது. எங்களின் சமீபத்திய அதிநவீன மருத்துவ சாதனங்களும், சிறந்த மருத்துவர்களும் நோயாளிகளுக்கு சிகிச்சையை மட்டுமல்ல, முழுமையான பராமரிப்பு சூழலை வழங்குவதையும் முக்கிய நோக்கமாகக் கொண்டு செயல்பட்டு வருகிறோம் என்று யூரிவித்தார். சிரிழிவு என்பது இந்தியாவின் சுகாதார பிரச்சினைகளில் முக்கிய ஒன்றாக ளுருவெடுத் துள்ளது. இதை கருத்தில் கொண்டு நீரிழிவு நோயாளிகளுக்கு சிறப்பான சிகிச்சை அளிக்க வேண்டும் என்பதற்காகவும் அது குறித்த விஸீப் புணர்வை ஏற்படுத்து வேண்டும் என்பதற்காகவும் இந்த கிளப்பை க்ளெனீகில்ஸ் ஹாஸ்பிடல் சென்னை திறந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

PASSPORT | MSME | PAN | AADHAAR
FSSAI | PATTA | LEGALHEIR
2,4 WHEELER INSURANCE
PROPERTY TAX, EB - NAME TRANSFER
STATE AND CENTRAL GOVT
AUTHORISED FRANCHISEE
ALL ONLINE SERVICES
இ-சேவை மையம்
ஸ்டார் ரெயின்போ சர்வீசஸ்
11,SOUTH PERUMAL KOIL STREET, VADAPALANI, CHENNAI - 600 026.
8148231942 / 8144337349
பொது இ-சேவை மையம்

"printed by S.MYTHILI and published by S.MYTHILI on behalf of S.MYTHILI and printed at Chennai Offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026 Editor S.MYTHILI"

தமிழ் குரல் மக்கள்
உள்ளது உள்ளபடி



## சிந்தாதிரிப்பேட்டை காவல் நிலையத்தில் பெண் காவலரிடம் ரகளையில் ஈடுபட்ட சரித்திர பதிவேடு குற்றவாளியான எதிரிக்கு 179 நாட்கள் சிறை தண்டனை மற்றும் அபராதம் ரூ.2,500/- விதித்து நீதிமன்றம் தீர்ப்பு.

சென்னை, 02 மார்ச் 2025:02.08.2023 அன்று இரவு, எஃப்-1 சிந்தாதிரிப்பேட்டை காவல் நிலைய முதல்நிலை பெண் காவலர் இந்துமதி என்பவர் காவல் நிலையத்தில் பணியிலிருந்த போது, அங்கு விசாரணைக்கு வந்த மோகன் (எ) தர்கா மோகன் என்ற சரித்திர பதிவேடு குற்றவாளி பெண் காவலர் இந்துமதியை தகாத வார்த்தைகளால் பேசி, கொலை மிரட்டல் விடுத்துள்ளார். இது குறித்து பெண் காவலர் இந்துமதி எஃப்-1 சிந்தாதிரிப்பேட்டை காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததின் பேரில், இந்திய தண்டனை சட்டம் மற்றும் தமிழ்நாடு பெண் வன்கொடுமை தடுப்புச்சட்டம் உள்ளிட்ட



சட்டப்பிரிவுகளில் வழக்குப் பதிவு செய்து, எதிரி மோகன் (எ) தர்கா மோகன், வ/63, த/பெ.எல்லப்பன், எஃப் பிளாக், என்.என். காலனி, சிந்தாதிரிப் பேட்டை என்பவரை கைது செய்து, நீதிமன்றக் காவலுக்கு உட்படுத்தினர்.

இவ்வழக்கு, எஃப்-1 சிந்தாதிரிப்பேட்டை காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினரால் முறையாக விசாரிக்கப்பட்டு, இறுதி அறிக்கை தயார் செய்து, சென்னை, எழும்பூர், 14வது பெருநகர குற்றவியல் நீதிமன்றத்தில் நீதிமன்ற விசாரணைக்கு உட்படுத்தப்பட்டது.

காவல் நிலைய ஆய்வாளர் மற்றும் நீதிமன்ற அலுவல் பணி காவல் குழுவினர் நீதிமன்றத்தில் தொடர்ச்சியாக சாட்சிகள் ஆஜர்படுத்தி, நீதிமன்ற வழக்கு விசாரணை நிறைவடையும் வரை சீரிய பணியாற்றி விசாரணை முடிவடைந்து, நீதிமன்றத்தால் இவ்வழக்கில் 26.02.2025 அன்று இறுதி தீர்ப்பு வழங்கப்பட்டது.

இவ்வழக்கில் கைது செய்யப்பட்ட எதிரி மோகன் மீது குற்றம் நிரூபிக்கப்பட்டதால், எதிரி மோகனுக்கு மொத்தம் 179 நாட்கள் சிறை தண்டனை மற்றும் ரூ.2,500/- அபராதமும், அபராதம் செலுத்த தவறினால் மேலும் 2 மாதங்கள் மற்றும் 2 வாரங்கள் சிறை தண்டனை அனுபவிக்க வேண்டும் என கனம் நீதிபதி அவர்களால் தீர்ப்பு வழங்கப்பட்டது.

மேற்படி வழக்கில் சிறப்பாக புலனாய்வு செய்து, நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு சிறப்பு கவனம் செலுத்தி குற்றவாளிக்கு உரிய தண்டனை பெற்று தந்த எஃப்-1 சிந்தாதிரிப் பேட்டை காவல் நிலைய ஆய்வாளர், அரசு தரப்பு வழக்குறைஞர் மற்றும் நீதிமன்ற அலுவல் பணி காவல் குழுவினரை காவல் உயரதிகாரிகள் வெகுவாகப் பாராட்டினர்.

## “கழகத் தலைவரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சருமான திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் உரை”

சென்னை, 02 மார்ச் 2025: சென்னை கொட்டிவாக்கம் ஒய்.எம்.சி.ஏ. மைதானத்தில் நடைபெற்ற 72-ஆவது பிறந்தநாள் விழா பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்டு ஏற்புரை ஆற்றினார். அதன் விவரம்:

72-ஆவது பிறந்தநாள் கொண்டாடும் நான் ரூ 75-ஆவது ஆண்டு பவள விழா கொண்டாடிய திராவிட முன்னேற்றக் கழகத் தலைவராகப் பணியாற்றி வருவதுதான் எனக்குக் கிடைத்த மிகப்பெரிய பெருமை! கோடான கோடி உடன்பிறப்புகள் - இங்கு என்னை வாழ்த்திய தலைவர்கள் - தமிழ்நாட்டு மக்கள் - உங்களால்தான் நான் முதலமைச்சராக அமர வைக்கப்பட்டிருக்கிறேன்! தி.மு.க. தலைமை பொறுப்பாக இருந்தாலும் - தமிழ்நாட்டின் முதலமைச்சர் பொறுப்பாக இருந்தாலும் - இரண்டுமே பேரறிஞர் அண்ணா இருந்த இடம்! நம்முடைய தமிழினத் தலைவர் கலைஞர் அவர்கள் அமர்ந்த இடம்! அந்த இடத்தில், இந்த சாதாரண - சாமானிய ஸ்டாலினையும் உட்கார வைத்தது, கழகத்தின் கோடான கோடி உடன்பிறப்புகள்தான்! உங்களின் இல்லத்துக்கும் - உள்ளத்துக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியையும் வணக்கத்தையும் முதலில் தெரிவித்துக் கொள்கிறேன்!

நான் ஏற்கெனவே பலமுறை சொல்லியிருக்கிறேன்... இது, நான் நினைத்துப் பார்க்காத இடம்... இது, நான் நினைத்துப் பார்க்காத உயரம்! இந்த இடத்துக்கு என்னை அழைத்துக் கொண்டு வந்தவர்கள், உடன்பிறப்புகளான நீங்கள்தான்! கோபாலபுரம் நான் பிறந்த இடமாக இருந்தாலும் - தமிழ்நாடு முழுவதும்தான் என்னை வளர்த்தது! ஏன் என்றால், 60 ஆண்டுகாலமாகத் தமிழ்நாட்டில் கிழக்கு - மேற்கு, வடக்கு - தெற்கு, கிராமம் - நகரம், குறுக்கு - நெடுக்கு, வெயில் - மழை, இரவு - பகல், பசி - தூக்கம் பார்க்காமல், ஓடியாடி உழைத்து, கருப்பு - சிவப்புக் கொடியை ஏற்றியதால்தான், கோட்டையில் கொடியேற்றும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது! ஓயாமல் உழைத்த தலைவர் கலைஞரின் வழித்தடத்தில், நானும் ஓயாமல் உழைக்கிறேன். தலைவரான பிறகும் உழைக்கிறேன்ஞ் முதல்வரான பிறகும் உழைக்கிறேன்! அண்ணாவின் யூம்பிக்குக் - கலைஞரின் உடன்பிறப்புக்கு ஓய்வும் இல்லை; சாய்வும் இல்லை என்ற எண்ணத்துடன் உழைக்கிறேன்! அதனால், இதுபோன்ற பிறந்தநாள் விழாக்கள் நெடுஞ்சாலைப் பயணத்தில் வரும் ஸ்பீட்-பிரேக் போல; ஒரு நிமிட ஓய்வு; அவ்வளவுதான்!

இந்த இனிய விழாவை, நான் மகிழத்தக்க வகையில் ஏற்பாடு செய்திருக்கும் மாரத்தான் அமைச்சர் - சென்னை தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் - மாண்புமிகு அமைச்சர் மா.சுப்பிரமணியன் அவர்களுக்கும்; அவருக்குத் துணைநின்ற சென்னை தெற்கு மாவட்டக் கழக நிர்வாகிகள், செயல்வீரர்கள், கழகத் தோழர்கள் அனைவருக்கும் என்னுடைய வாழ்த்துகள்! நன்றி!

இந்த நிகழ்ச்சியில் எனக்கு என்ன மகிழ்ச்சி என்றால், இது பிறந்தநாள் வாழ்த்துக்காக மட்டும் இல்லாமல், நம்முடைய தோழமைக் கட்சித் தலைவர்கள் அனைவரும் ஒரே மேடையில் இணைந்து, மூத்த அமைச்சரும் கழகப் பொதுச் செயலாளருமான அருமை அண்ணன் துரைமுருகன் அவர்கள் தலைமையில் தமிழ்நாட்டுக்கான உரிமைக்குரலை எழுப்புவதற்கு வாய்ப்பாக அமைந்திருப்பதுதான் என்னுடைய மகிழ்ச்சிக்குக் காரணம்!

மானமிகு அய்யா ஆசிரியர் அவர்களும் - சகோதரர் செல்வப்பெருந்தகை அவர்களும் - அண்ணன் வைகோ அவர்களும் - தோழர்கள் சண்முகம் அவர்களும், முத்தரசன் அவர்களும் - என் பாசமிகு சகோதரர் திருமாவளவன் அவர்களும் - பேராசிரியர்கள் அய்யா காதர் மொய்தீன் அவர்களும், ஜவாஹிருல்லா அவர்களும் - அதேபோல, சகோதரர்கள் ஈஸ்வரன் அவர்களும், வேல்முருகன் அவர்களும், அருணாச்சலம் அவர்களும், பேராசிரியர் சுப.வீரபாண்டியன் அவர்களும், பொன்.குமார் அவர்களும், ஸ்ரீதர் வாண்டையார் அவர்களும், எர்ணாவூர் நாராயணன் அவர்களும், முருகவேல்ராஜன் அவர்களும், கருணாஸ் அவர்களும், அதியமான் அவர்களும், அம்மாசி அவர்களும், தமீமுன் அன்சாரி அவர்களும், திருப்பூர் அல்தாப் அவர்களும், வசீகரன் அவர்களும் என இந்த மேடையே, உரிமைக்களமாக - வெற்றிக்கான அடித்தளமாக அமைந்திருக்கிறது.

பிறந்தநாள் விழா மேடையைப் போல் இல்லை, வெற்றி விழா மேடையைப் போல் இருக்கிறது! ஆமாம், இது வெற்றி விழா மேடைதான்! 2019-இல் இருந்து கொள்கைக் கூட்டணி அமைத்து வெற்றி பெற்று வரும் நாம், 2026-இலும் அடைய இருக்கும் வெற்றிக்குத் தொடக்க விழா மேடை இது! என்னைச் சந்திப்பவர்கள், ‘உங்கள் வெற்றிக்கு எது அடிப்படை?’ என்று கேட்டால், எங்களின் தோழமை உணர்வுதான் என்று அனைத்து இடத்திலும் மறக்காமல் பதிவு செய்பவன் நான்! ஏன், தமிழ்நாடு சட்டமன்றத்திலேயே கூட பதிவு செய்திருக்கிறேன்! ஊடக நண்பர்களுக்கும், எதிர்க்கட்சியினருக்கும் நான் சொல்லிக் கொள்ள விரும்புவது, கருத்தியல் கூட்டணி அமைத்திருக்கும் எங்களுக்குள் கருத்து மாறுதல் வரும். ஆனால், விரிசல் வராது! எங்களின் ஒற்றுமையை எரிச்சலுடன் பார்த்து, விரிசல் வருமா என்று சிலர் எதிர்பார்த்துக் கொண்டு இருக்கலாம்... அவர்களுக்கு நான் சொல்லிக் கொள்வது, உங்களின் ஆசையில்தான் மண் விழுமே தவிர; எங்கள் கூட்டணியில் விரிசல் விழாது!

தோழமைக் கட்சித் தலைவர்களே... என்னை முதலமைச்சர் நாற்காலியில் உட்கார வைத்தவர்கள் நீங்கள். உங்களை எப்போதும் என்னுடைய இதய நாற்காலியில் நான் உட்கார வைத்திருக்கிறேன்! உங்களுக்கு நான் உறுதியோடு சொல்லிக் கொள்கிறேன்... நம்முடைய ஒற்றுமைதான், தமிழ்நாட்டைக் காப்பாற்றியிருக்கிறது! தமிழைக் காப்பாற்றியிருக்கிறது. சமூக நீதியைக் காப்பாற்றியிருக்கிறது! சகோதரத்துவத்தைக் காப்பாற்றியிருக்கிறது! ஒற்றுமையைக் காப்பாற்றியிருக்கிறது! ஏன், ஒட்டுமொத்த இந்தியாவையே காப்பாற்றியிருக்கிறது!

## இந்தித் திணிப்பை என்றும் எதிர்ப்போம் 5 - அன்னைத் தமிழே! சூளுரைக்கிறேன்! - கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் “உங்களில் ஒருவன்” மடல்

சென்னை, 02 மார்ச் 2025: நம் உயிருடன் கலந்திருக்கும் தலைவர் கலைஞரின் அன்பு உடன்பிறப்புகளுக்கு, உங்களில் ஒருவன் எழுதும் தொடர் மடல்.

தமிழ்நாடு காட்டுகின்ற பாதையே ஒவ்வொரு மாநிலமும் தன் தாய்மொழியைக் காப்பதற்கான பாதை. ஆதிக்க மொழிகளை அடையாளம் கண்டு, அவற்றின் வலையில் வீழாமல் தடுத்துப் பயணிக்கும் பாதை என்பதை பஞ்சாப், தெலுங்கானா மாநில அரசுகளின் அறிவிப்பு உறுதி செய்திருக்கிறது.

பஞ்சாப் மாநிலத்தை ஆள்கின்ற ‘ஆம் ஆத்மி’ கட்சி அரசு வெளியிட்டுள்ள உத்தரவில், தனது மாநிலத்தில் உள்ள அனைத்து வகைப் பள்ளிகளிலும் பஞ்சாபி மொழியை முதன்மையாகவும் கட்டாயமாகவும் கற்றுத் தர வேண்டும் எனத் தெரிவித்துள்ளது. தெலுங்கானா மாநிலத்தை ஆள்கின்ற காங்கிரஸ் அரசின் சார்பில் வெளியாகியுள்ள உத்தரவிலும், ஒன்றாம் வகுப்பு முதல் பத்தாம் வகுப்பு வரை தெலுங்கு மொழியைக் கட்டாயமாகக் கற்பிக்க வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது. எதற்காக இந்த திடீர் அறிவிப்பு?

மாநில மொழிகளை வளர்ப்பதற்கும், பரவச் செய்வதற்கும்தான் தேசிய கல்விக் கொள்கை மூலம் மும்மொழித் திட்டத்தைச் செயல்படுத்துகிறோம் என்று ஒன்றிய பா.ஜ.க. அரசு சொல்வது பச்சைப் பொய் என்பதை பஞ்சாப், தெலுங்கானா மாநிலங்கள் அம்பலப்படுத்தியுள்ளன.

ஒன்றிய அரசின் பாடத்திட்டத்தின் கீழ் செயல்படும் சி.பி.எஸ்.இ. பள்ளிகளில், பத்தாம் வகுப்புக்கு இரண்டு முறை பொதுத்தேர்வு நடத்துவது தொடர்பான வரைவு வெளியிடப்பட்டபோது அதில் மாநில மொழிகள் பலவும் விடுபட்டிருந்தன.

இது குறித்து பஞ்சாப் மாநில கல்வித்துறை அமைச்சரிடமிருந்து எதிர்ப்புக் குரல் வெளியான பிறகே, சி.பி.எஸ்.இ. வரைவுப் பட்டியல் முழுமையானதல்ல என்றும், எந்த மாநிலத்தின் மொழியையும் எடுக்கவில்லை என்றும் விளக்கமளிக்கப்பட்டது.

இந்தியையும் சமஸ்கிருதத்தையும் திணிப்போம். மாநில மொழிகள் அனைத்தையும் வெறுப்போம் என்பதே பா.ஜ.க.வின் மறைமுக மொழிக் கொள்கை. இதனை நேரடியாகத் தோலுரித்துக் காட்டிய மாநிலம் தமிழ்நாடு. அதன் வழியில் சகோதர மாநிலங்களும் தங்கள் தாய்மொழியைப் பாதுகாக்கும் அரண் அமைக்கும் சட்ட வழிகளை மேற்கொண்டு வருகிறது. ஒரு மாநிலத்தில் பல வகையான பாடத் திட்டங்களைப் பின்பற்றக்கூடிய பள்ளிகள் உண்டு. எந்த வகைப் பாடத் திட்டத்தைப் பின்பற்றக் கூடிய பள்ளிகளாக இருந்தாலும் அந்தந்த மாநிலங்களின் தாய்மொழி என்பது முக்கியமானது. அதனை இன்று பஞ்சாப்பும், தெலுங்கானாவும் உணர்ந்து உத்தரவிட்டிருப்பதை, இருபது ஆண்டுகளுக்கு முன்பே தொலைநோக்குப் பார்வையுடன், “தமிழ்நாட்டில் ஒன்று முதல் பத்தாம் வகுப்பு வரையிலான அனைத்துப் பள்ளிகளிலும் தமிழ் ஒரு மொழிப் பாடமாகக் கற்றுத் தரப்பட வேண்டும்” என சட்டமாக நிறைவேற்றியவர் முத்தமிழறிஞர் கலைஞர்.

எதிர்கால மாணவச் சமுதாயத்தினர் தாய் மொழியாம் தமிழைக் கற்க வேண்டியது மிகவும் அவசியம் என்ற தெளிவான பார்வையுடன் நிறைவேற்றப்பட்ட அந்தச் சட்டத்திலும், நம் உயிர்நிகர்த் தலைவர் கலைஞருக்கேயுரிய நடைமுறை எதார்த்தத்துடனான கருணையும் வெளிப்பட்டது. தாய்மொழியைக் கற்பதாக இருந்தாலும் கூட அதனை வலிந்து திணிக்கக்கூடாது என்ற முறையில், முதல் ஆண்டில் ஒன்றாம் வகுப்பு எனத் தொடங்கி பத்தாண்டுகளில் பத்தாம் வகுப்பு வரை அனைத்துப் பள்ளி மாணவர்களும் தமிழைக் கற்றாக வேண்டும் என்கிற வகையில் அந்தச் சட்டத்தை நிறைவேற்றினார். தமிழாகவே வாழ்ந்த முத்தமிழறிஞர் கலைஞரின் சட்டத்திற்கு நீதிமன்றங்களும்கூட தடை விதிக்கவில்லை.

தமிழ்நாட்டில் சி.பி.எஸ்.இ. யூள்ளிகளாக இருந்தாலும், வேறு வகை பாடத் திட்டங்களைக் கொண்டுள்ள பள்ளிகளாக இருந்தாலும் தமிழ் மொழியைக் கற்றே ஆக வேண்டும் என்ற நிலையை நம் உயிர்நிகர்த் தலைவர் கலைஞர் அரசு உருவாக்கியதால்தான், பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வுக்கான வரைவை வெளியிட்ட சி.பி.எஸ்.இ., அதில் பிற மாநில மொழிகளைத் தவிர்த்திருந்தபோதும் தமிழைத் தவிர்க்க முடியாத நிலை உருவானது. தமிழ்நாடு வகுத்த பாதையில் மற்ற மாநிலங்களும் தங்கள் தாய்மொழியைக் கட்டாயமாக்கும் உத்தரவை வெளியிட்டு வருகின்றன.

“இந்தி பேசாத மாநில மக்கள் விரும்புகிறவரை ஆங்கிலம் நீடிக்கும்” என்ற, முதல் பிரதமர் நேருவின் உறுதிமொழி மீறப்பட்டு, ஆட்சி மொழி - அலுவல் மொழி என்ற வகையில் இந்தி மட்டுமே ஆதிக்கம் செலுத்தும் என்ற நிலை 1965 ஆம் ஆண்டு இந்தியாவில் உருவானபோது, அதன் பாதிப்பு எப்படிப்பட்டதாக இருக்கும் என்பதை முதலில் எச்சரித்த மாநிலம் தமிழ்நாடுதான். எச்சரித்தது மட்டுமல்ல, ‘தமிழ் வாழ்க..இந்தி ஒழிக’ என உச்சரித்தபடியே தன் உடலுக்குத் தானே தீ வைத்துக்கொண்டு மொழி காக்கும் போரில் உயிர் ஈந்த தியாக வரலாறும் தமிழ் நாட்டிற்குரியது.

கீழப்பழூவூர் சின்னசாமி, கோடம்பாக்கம் சிவலிங்கம், விருகம்பாக்கம் அரங்கநாதன், கீரனூர் முத்து, சத்தியமங்கலம் முத்து, விராலிமலை சண்முகம், அய்யம்பாளையம் வீரப்பன், பீளமேடு தண்டபாணி, மயிலாடுதுறை சாரங்கபாணி எனத் தமிழ் இளைஞர்கள் தீக்குளித்தும், நஞ்சு அருந்தியும் இந்தித் திணிப்பை எதிர்த்து, தாய்மொழி காத்திட தங்கள் இன்னுயிர் ஈந்தனர். சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக் கழக மாணவர் சிவகங்கை இராசேந்திரன் காவல் துறையின் துப்பாக்கித் தோட்டாவுக்கு, தன் மார்பு காட்டி வீரச்சாவு அடைந்தார். கோவை, பொள்ளாச்சி உள்பட தமிழ்நாட்டின் பல பகுதிகளிலும் காவல்துறையும், துணை ராணுவமும் நடத்திய வேட்டையில், மொழி காக்கும் போரில் ஈடுபட்ட இளைஞர்களும் மாணவர்களும் துடிக்கத் துடிக்கக் கொல்லப்பட்டனர்.

கொந்தளித்துக் கிளர்ந்தெழுந்த மாணவப் பட்டாளத்தைத் தூண்டி விடும் வகையில் எழுதியதாகவும் பேசியதாகவும் குற்றம் சாட்டப்பட்ட முத்தமிழறிஞர் கலைஞரை பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் பாளையங்கோட்டை தனிமைச் சிறையில் அடைத்தனர். அதே சட்டத்தில் முரசொலி மாறன் அவர்களும் கைது செய்யப்பட்டார். பேரறிஞர் அண்ணா உள்பட கழகத்தினர் களம் கண்டனர். சிறை சென்றனர். தமிழ்நாட்டு மக்களின் தாய்மொழி உணர்வுத் தீ, ஆந்திரா தொடங்கி அசாம் வரையிலும் பரவியது. அதன்பிறகே, இந்தித் திணிப்பு முறியடிக்கப்பட்டு, இந்திய ஒன்றிய அரசில் ஆங்கிலமும் இணை ஆட்சி மொழியாக - அலுவல் மொழியாக நீடிக்கும் என்ற நிலை ஏற்பட்டது. இந்திய மொழிகளை ஒவ்வொரு முறையும் காத்து நிற்பது தமிழ்நாடும், தமிழர்களின் மொழியுணர்வும்தான்.

அந்த உணர்வை அரசியல் கணக்காக அணுகாமல், எதிர்காலத் தலைமுறையினரைப் பாதுகாக்கும் கவசமாக்கிடும் வகையில், 1967ல் பேரறிஞர் அண்ணா தலைமையில் அமைந்த தி.மு.க. அரசு, இருமொழிக் கொள்கையை நிறைவேற்றிட முன்வந்தது. 1968 ஜனவரி 23ஆம் நாள் தமிழ்நாடு சட்டப் பேரவையின் சிறப்புக் கூட்டத்தை முதலமைச்சர் அண்ணா கூட்டினார். “தமிழ் நாட்டில் அனைத்துப் பள்ளிகளிலும் மும்மொழித் திட்டத்தை அகற்றிவிட்டு, தமிழ் - ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளுக்கு இடமளித்து, இந்தியை அறவே நீக்கிவிட இப்பேரவை தீர்மானிக்கிறது” என்ற வரலாற்றுச் சிறப்பு மிக்க இருமொழிக் கொள்கை தீர்மானத்தை நிறைவேற்றினார்.

இந்திய ஒன்றியத்தில் ஒரு மாநிலத்திற்குரிய சட்டவழியிலான உரிமையை மிகச் சரியாகக் கையாண்டு இருமொழிக் கொள்கையைச் சட்டமாக்கிய பேரறிஞர் அண்ணா, “என்னால் ஆனதை நான் செய்து விட்டேன். இனி டெல்லி தன்னால் ஆனதை செய்து கொள்ளட்டும்” என்று அறைகூவல் விடுத்தார். ஒன்றிய பா.ஜ.க. அரசு எப்படியாவது தமிழை அழித்து, இந்தி - சமஸ்கிருதத்தைத் திணிக்கலாம் என முயற்சிக்கிறது. அண்ணாவின் இருமொழிக் கொள்கை ஆயுதமாகவும் கேடயமாகவும் தமிழைக் காத்து நிற்கிறது.

பேரறிஞர் அண்ணா நம்மை விட்டு மறைந்த பிறகு, இயக்கத்தையும் ஆட்சியையும் தலைமையேற்று வழிநடத்திய நம் உயிர் நிகர்த் தலைவர் கலைஞர் அவர்கள் 1970-ஆம் ஆண்டு பிப்ரவரி 22-ஆம் நாள் தீரர் கோட்டமாம் திருச்சியில் நடந்த மாவட்ட மாநாட்டில் தி.மு.கழகத்தின் கொள்கை வழிப் பயணத்திற்கான ஐம்பெரும் முழக்கங்களை உடன்பிறப்புகளுக்கு வழங்கினார்.

* அண்ணா வழியில் அயராது உழைப்போம்!

* ஆதிக்கமற்ற சமுதாயம் அமைத்தே தீருவோம்!

* இந்தித் திணிப்பை என்றும் எதிர்ப்போம்!

* வன்முறை தவிர்த்து வறுமையை வெல்வோம்!

* மாநிலத்தில் சுயாட்சி, மத்தியில் கூட்டாட்சி.

இவை தான் அந்த முழக்கங்கள்.

தமிழ் குரல் மக்கள்
உள்ளது உள்ளபடி
ஞாயிறு,
மார்ச் 02, 2025

## போதைப்பொருள் தடுப்பு நுண்ணறிவுப்பிரிவினரின்(ஏஎன்ஐயு) தீவிர நடவடிக்கையால் திருவொற்றியூர் பகுதியில் மெத்தம்பெட்டமைன் போதைப்பொருள் வைத்திருந்த ஒரு பெண் உட்பட 4 நபர்கள் கைது. 36 கிராம் மெத்தம்பெட்டமைன், 2 செல்போன்களுடன் 1 கார் பறிமுதல்

சென்னை 02, மார்ச் 2025: சென்னை பெருநகர காவல், போதைப்பொருள் தடுப்பு நுண்ணறிவுப் பிரிவு (ஏஎன்ஐயு) யூனிப்படை யினருக்கு கிடைத்த ரகசிய தகவலின் பேரில், ஏஎன்ஐயு தனிப் படையினர் மற்றும் பி-8 திருவொற்றியூர் காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் ஒருங் கிணைந்து 28.02.2025 மாலை, திருவொற் றியூர், விம்கோ ஜெய்கோபால் கரோடியா பள்ளி அருகில் கண்காணித்து அங்கு மெத்தம் பெட்டமைன் என்ற போதைப்பொருள் வைத்திருந்த 1.கிஷோர் குமார், வ/27, த/பெ.முத்து, அன்னை சிவகாமி நகர் 6வது தெரு, எண்ணூர், சென்னை, 2.மதன், வ/18, த/பெ.ஸ்டாலின், அன்னை சிவகாமி நகர், எண்ணூர், 3.கார்த்திக், வ/18, த/பெ. மிர செல்வம், கே.வி.கே. குப்பம், திருவொற்றியூர் ஆகிய 3 நபர்களை கைது செய்து, விசாரணை செய்தனர்.

மேலும், இவர்கள் கொடுத்த தகவலின் பேரில், இவர்களுக்கு மெத்தம்பெட்டமைன் சப்ளை செய்த 4.ஜரீனா சல்மா, பெ/வ.62, க/பெ.உசேன், 13வது மேற்கு குறுக்கு தெரு, எம்.கே.பி.நகர், சென்னை என்பவரை கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட 4 நபர்களிடமிருந்து மொத்தம் 36 கிராம் எடை கொண்ட மெத்தம் பெட்டமைன் மற்றும் 1 கார், 2 செல்போன்கள் பறிமுதல் செய்யப் பட்டு, விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

கைது செய்யப்பட்ட எதிரிகள் நால்வரும் விசாரணைக்குப் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட உள்ளனர். மேலும், இவ்வழக்கில் தொடர்புடைய மற்ற நபர்களை காவல் குழுவினர் தீவிரமாக தேடி வருகின்றனர்.

## கோடைகாலத்தில் மின்வெட்டு இல்லாத நிலையை கடைபிடிக்க தொடர்ந்து அனைத்து நடவடிக்கைகளும் எடுத்து வருகிறோம் -தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் தமிழ்நாடு மின்வாரியம் மற்றும் தமிழ்நாடு மின் பகிர்மான கழகம் மருத்துவர் ஜெ.ராதாகிருஷ்ணண், இ.ஆ.ப., அவர்கள்

சென்னை 02, மார்ச் 2025: தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் வட்டம் தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம், உடன்குடி மிகஉய்ய அனல்மின் திட்டம் - நிலை - மின் பணிகள் நடைபெற்று வருவதை தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் தமிழ்நாடு மின்வாரியம் மற்றும் தமிழ்நாடு மின் பகிர்மான கழகம் மருத்துவர் ஜெ.ராதாகிருஷ்ணண், இ.ஆ.ப., அவர்கள் 01.03.2025 அன்று பூார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வின் போது, தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் தமிழ்நாடு மின்வாரியம் மற்றும் தமிழ்நாடு மின் பகிர்மான கழகம் மருத்துவர் ஜெ.ராதாகிருஷ்ணண், இ.ஆ.ப., அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

திருச்செந்தூர் அருகிலுள்ள உடன்குடி ஞூாலன் குடியிருப்பில் 2 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் அனல்மின் நிலையம் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.


மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் எரிசக்தி முழுமையாக நூம்முடைய தேவைக்கு இருக்க வேண்டும். அதே போல் புதிய திட்டங்களின் மூலமும் மின்சாரம் கிடைக்க செய்ய வேண்டும் என்பதற்காக இந்த உடன்குடி திட்டத்தை விரைவாக முடிக்க அறிவுருத்தியுள்ளார்கள். ரூ.13,077 கோடி மதிப்பீட்டில் மூன்று கட்டங்களாக இப்பணி அமைக்க திட்டமிடப்பட்டு, முதற்கட்டமாக 660 மெகா வாட் உற்பத்தித்திறன் கொண்ட மின் எந்திரம் அமைக்கும்பணி நடந்து வருகிறது.

முதல் முறையாக தமிழ்நாடு மின்சார வாரியம் மூலம் இந்த ஜெட்டி அமைக்கப் படுகிறது. சுமார் 8 கி.மீ. தொலைவிற்கு கடல் உள்ளே நிலக்கரி கொண்டு வரும் கப்பலை நிறுத்தி விட்டு, அதிலிருந்து நிலக்கரியை கொண்டு வர உயர்மட்ட ராட்சச இரும்பு கம்பிபாலம் அமைக்கும் பணியும் முடியும் நிலையில் உள்ளது. இந்த பாலம் வழியாக ராட்சத கண்டெய்னர் மூலம் கடலில் இருந்து அனல் மின் நிலையத்திற்கு நிலக்கரி நேரடியாக கொண்டு செல்ல திட்டமிடப் பட்டு உள்ளது.

மேலும், முதல் யூனிட்க்கான பணிகள் முடிவடைந்து மே மாத இறுதிக்குள் செயல்பாட்டிற்கு வரும் என எதிர்பார்க்கபடுகிறது. இதற்கான பணிகள் மும்முரமாக நடந்தாலும். பணியாளர்கள் பற்றாகுறை இருப்பதாலும் தொய்வு ஏற்பட்டு உள்ளது. மேலும், தமிழ்நாட்டில் வெயிலின் தாக்கம் அதிகரித்து வருவதால் மின் தேவை அதிகரித்த வண்ணம் உள்ளது.

மாநிலம் முழுவதும் தடையில்லா மின்சாரம் வழங்க மின்சார வாரியம் நடவடிக்கை எடுத்து வருகிறது. இந்த மின் தேவையினை தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தின் மின் உற்பத்தி நிலையங்களில் உற்பத்தி செய்யப்படும் மின்சாரம், வெளி மின்சந்தை, மின் பரிமாற்றம் மற்றும் குறுகிய கால ஒப்பந்தம் வாயிலாக எந்த வித பற்றாக்குறையும் இல்லாமல் திட்டமிடப்பட்டு உள்ளது. மின்சார வாரியங்களின் பொருளாதார நிலையை மேம்படுத்தவும், கடன் சுமையை குறைக்கவும் பல்வேறு நடவடிக் கைகள் தீவிரமாக எடுத்து வந்து கொண்டிருக்கிறோம் என தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் தமிழ்நாடு மின்வாரியம் மற்றும் தமிழ்நாடு மின் பகிர்மான கழகம் மருத்துவர் ஜெ.ராதாகிருஷ்ணண், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார். இந்த ஆய்வின் போது, தலைமை பொறியாளர் (பொ) திரு.ராம்குமார், மேற்பார்வையாளர்கள் திரு.பாண்டியராஜன், திரு.ராஜேந்திரன், தமிழ்நாடு மின்வாரியம் மற்றும் தமிழ்நாடு மின் பகிர்மான கழக உதவி இயக்குநர் திரு.மூர்த்தி மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உனிருந்தனர்.

## வேப்பேரி பகுதியில் கத்தியைக் காட்டி மிரட்டி பணம் பறித்துச் சென்ற சரித்திர பதிவேடு குற்றவாளி கைது.



சென்னை 02, மார்ச் 2025: சென்னை, வேப்பேரி, டவுட்டன் மேம்பாலம் கீழ் பிளாட்பாரத்தில் வசித்து வரும் சிவா, வ/30, த/பெ. வெங்கடேசன் என்பவர் நேற்று (28.02.2025) காலை, புரசைவாக்கம் பண்டாரம் தெருவில் காகித குப்பைகளை பொறுக்கிக் கொண்டு இருந்த போது, அங்கு வந்த நிர்மல்ராஜ் என்பவர் மேற்படி சிவாவிடம் தகாத வார்த்தைகள் பேசி, கத்தியை வைத்து மிரட்டி, நிர்மல்ராஜ் சட்டைப் பையில் வைத்திருந்த பணம் ரூ.500/-ஐ பறித்துக் கொண்டு, கொலைமிரட்டல் விடுத்து தப்பிச் சென்றார்.

இது குறித்து சிவா, ஜி-1 வேப்பேரி காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததின் பேரில், போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டனர்.

ஜி-1 வேப்பேரி காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்து மேற்படி குற்ற சம்பவத்தில் ஈடுபட்ட நிர்மல் ராஜ், வ/23, த/பெ. மணிவண்ணன், சாலைமா நகர், புரசைவாக்கம், சென்னை என்பவரை கைது செய்தனர். அவரிடமிருந்து குற்றச் செயலுக்கு பயன்படுத்திய 1 கத்தி பறிமுதல் செய்யப்பட்டது.

விசாரணையில் எதிரி சிவா ஜி-1 வேப்பேரி காவல் நிலைய சரித்திர பதிவேடு குற்றவாளி என்பதும், இவர் மீது கொள்ளை, அடிதடி, கஞ்சா உட்பட 10 குற்ற வழக்குகள் உள்ளதும் தெரியவந்தது.

கைது செய்யப் பட்ட எதிரி சிவா விசாரணைக்குப் பின்னர், 28.02.2025 அன்று சிதி மன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டு, நீதிமன்ற ஞுத்தரவுப் படி சிறையில் அடைக்கப்பட்டார்.

## என்எக்ஸ்டி மாநாட்டில் முக்கிய பிரமுகர்களை பிரதமர் சந்தித்து உரையாடினார்

சென்னை 02, மார்ச் 2025: பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று புதுதில்லி பாரத மண்டபத்தில் உள்ள என் எக்ஸ்டி மாநாட்டில் பல்வேறு முக்கிய பிரமுகர்களை சந்தித்து உரையாடினார். இந்தப் பிரமுகர்கள் பட்டியலில் திரு. கார்லோஸ் மான்டெஸ், பேராசிரியர் ஜொனாதன் ஃப்ளெமிங், டாக்டர் ஆன் லிபர்ட், பேராசிரியர். வெசெலின் போபோவ்ஸ்கி, டாக்டர் பிரையன் கிரீன், திரு. அலெக் ரோஸ், திரு. ஒலெக் ஆர்டெமியேவ், திரு. மைக் மாசிமினோ ஆகியோர் அடங்குவர்.

இது தொடர்பான பதிவுகளில் அவர் குறிப்பிட்டுள்ளதாவது;

"திரு கார்லோஸ் மான்டெஸ் உடன் இன்று என்எக்ஸ்டி மாநாட்டில் கலந்துரையாடினேன். சமூகப் புதுமைகளை மேம்படுத்துவதில் அவர் சிறந்த பங்களிப்பைச் செய்துள்ளார். டிஜிட்டல் தொழில்நுட்பம், நிதிநுட்பம் மற்றும் பலவற்றில் இந்தியாவின் முன்னேற்றங்களை அவர் பாராட்டினார்''.

“எம்ஐடி ஸ்லோன் ஸ்கூல் ஆஃப் மேனேஜ்மென்ட்டுடன் தொடர்புடைய பேராசிரியர் ஜொனாதன் ஃப்ளெமிங்கைச் சந்தித்தேன். பொது மற்றும் தனியார் துறைகளில் வாழ்க்கை அறிவியலில் அவரது பணி முன்னுதாரணமானது. இந்தத் துறையில் வரவிருக்கும் திறமை மற்றும் புதுமைகளுக்கு வழிகாட்டுவதற்கான அவரது ஆர்வம் ஊக்கமளிக்கிறது''.

"டாக்டர் ஆன் லிபர்ட்டைச் சந்தித்ததில் மகிழ்ச்சி. பார்கின்சன் நோய்க்கு சிகிச்சையளிப்பதில் அவரது பணி பாராட்டுக்குரியது. வரும் காலங்களில் பலருக்கு சிறந்த வாழ்க்கைத் தரத்தை அது உறுதி செய்யும்''.

“பேராசிரியர் வெசெலின் போபோவ்ஸ்கி உடனான சந்திப்பு மகிழ்ச்சியளிக்கிறது. வேகமாக மாறிவரும் உலகில் சர்வதேச உறவுகள் மற்றும் புவிசார் அரசியல் பற்றிய புரிதலை ஆழப்படுத்துவதில் அவர் பாராட்டத்தக்க பணியைச் செய்துள்ளார்''.

“இயற்பியல் மற்றும் கணிதத்தின் மீது மிகுந்த ஆர்வம் கொண்ட ஒரு முன்னணி கல்வியாளரான டாக்டர் பிரையன் கிரீனை சந்தித்ததில் மகிழ்ச்சி. அவரது படைப்புகள் பரவலாகப் போற்றப்படுகின்றன. வரும் காலங்களில் கல்வி விரிவுரையை அவை வடிவமைக்கும்''

"இன்று திரு அலெக் ரோஸைச் சந்தித்ததில் மகிழ்ச்சி. புதுமை மற்றும் கற்றல் தொடர்பான அம்சங்களை வலியுறுத்தும் ஒரு சிறந்த சிந்தனையாளர் மற்றும் எழுத்தாளராக அவர் முத்திரை பதித்துள்ளார்''.

"ரஷ்யாவைச் சேர்ந்த முன்னணி விண்வெளி வீரர் திரு ஒலெக் ஆர்டெமியேவ்-ஐச் சந்தித்ததில் மகிழ்ச்சி. சில முன்னோடி பயணங்களில் அவர் முன்னணியில் இருந்துள்ளார். அவரது சாதனைகள் பல இளைஞர்களை அறிவியல் மற்றும் விண்வெளி உலகில் பிரகாசிக்கத் தூண்டும்"

"சிறந்த விண்வெளி வீரரான திரு. மைக் மாசிமினோவைச் சந்தித்ததில் மகிழ்ச்சி அடைகிறேன், விண்வெளியில் அவருக்கு இருந்த ஆர்வத்தை இளைஞர்கள் மத்தியில் பிரபலமாக்குவது பரவலாக அறியப்படுகிறது. கற்றல் மற்றும் புதுமைகளை மேம்படுத்துவதில் அவர் எவ்வாறு பணியாற்று கிறார் என்பதும் பாராட்டுக்குரியது"

## கோட்டூர்புரம் பகுதியில் கட்டிட வேலைக்காக வைத்திருந்தசென்ட்ரிங் இரும்பு தகடுகளை திருடிய 2 நபர்கள் கைது. 30 சென்ட்ரிங் இரும்பு தகடுகள் மீட்பு.

சென்னை 02, மார்ச் 2025: சென்னை, மேடவாக்கம், விஜயநகரம், காந்தி தெருவில் வசித்து வரும் ஜெகநாதன், வ/31, த/பெ. சண்முகம் என்பவர் தனியார் நிறுவனத்தில் பொறியாளராக வேலை செய்து வருகிறார். இவர் 27.02.2025 அன்று இரவு, கோட்டூர் புரம், தண்டாயுதபாணி 1வது தெருவில் கட்டுமான பணி செய்து வரும் இடத்தில் 30 சென்ட்ரிங் இரும்பு தகடுகளை வைத்துவிட்டு, மறுநாள் (28.02.2025) பார்த்தபோது, 30 சென்ட்ரிங் இரும்பு தகடுகளும் திருடு போயிருந்தது தெரியவந்தது. இது குறித்து ஜெகநாதன், ஜே-4 கோட்டூர்புரம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததின் பேரில் வழக்குப் பதிவு செய்து போலீசார் விசாரணை மேற்கொண்டனர்.

ஜே-4 கோட்டூர்புரம் காவல் நிலைய குற்றப்பிரிவு ஆய்வாளர் தலைமை யிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்து, மேற்படி திருட்டு சம்பவத்தில் ஈடுபட்ட 1.தனுஷ், வ/20, த/பெ.கணேஷ், 2வது தெரு, ஜிப்சி காலனி, கோட்டூர் புரம், சென்னை, 2.சிங்விக்ரம், வ/21, த/பெ. காந்தாராவ், 2வது தெரு, ஜிப்சி காலனி, கோட்டூர் புரம், சென்னை ஆகிய 2 நபர்களை கைது செய்தனர்.

அவர்களிடமிருந்து மேற்படி இடத்தில் இருந்து திருடப்பட்ட சுமார் ரூபாய் 60 ஆயிரம் மதிப்புள்ள 30 சென்ட்ரிங் இரும்பு தகடுகள் மீட்கப் பட்டது.

கைது செய்யப் பட்ட எதிரிகள் இருவரும் விசா ரணைக்குப் பின்னர் 28.02.2025 அன்று நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு, உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டது.

## புது தில்லியில் 49வது சிவில் கணக்கு தினம் கொண்டாடப்பட்டது.

சென்னை 02, மார்ச் 2025: இந்திய சிவில் கணக்கு பணியின் (ஐசிஏஎஸ்) 49வது நிறுவன நாளைக் குறிக்கும் வகையில், சிவில் கணக்கு தினம் 2025, புதுதில்லியில் கொண்டாடப்பட்டது. மத்திய நிதி மற்றும் பெரு வணிக நிறுவன விவகாரங்கள் துறை அமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் தலைமை வகித்தார்.

நிதி அமைச் சகத்தின் செலவினத்துறை செயலாளர் டாக்டர் மனோஜ் கோவில், தலைமைக் கணக்கு கட்டுப்பாட்டாளர் திரு ஷியாம் எஸ். துபே ஆகியோரும் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர். இந்திய சிவில் கணக்கு அமைப்பின் அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள், இந்திய அரசின் நிதி ஆலோசகர்கள், செலவினத் துறை மற்றும் பிற அமைச்சகங்கள் / இந்திய அரசின் துறைகளின் மூத்த அதிகாரிகள், ஓய்வுபெற்ற ஐசிஏஎஸ் அதிகாரிகள், வங்கிகள் மற்றும் மாநில அரசுகளின் மூத்த அதிகாரிகள் உட்பட பலர் கொண்டாட் டத்தில் பங்கேற்றனர்.

தொடக்க விழாவின் போது, மத்திய நிதியமைச்சர் பொது நிதி மேலாண்மை அமைப்பு பற்றிய தொகுப்பையும் வெளியிட்டார்.

இந்திய சிவில் கணக்குகள் அமைப்பின் பரிணாமம் மற்றும் சாதனைகள் குறித்த குறும்படமும் திரையிடப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் உரையாற்றிய மத்திய நிதியமைச்சர், நிர்வாகத்தின் முக்கிய இலக்குகளை அடைவதில் பொது நிதி மேலாண்மை அமைப்பு (பிஎஃப்எம்எஸ்) ஆற்றிய பங்கை அங்கீகரித்தார்> 60 கோடி பயனாளிகளுக்கு பயனளிக்கும் கடைசி மைலை எட்டுவது, 1100 டிபிடி திட்டங்களை உள்ளடக்கிய 1200 க்கும் மேற்பட்ட மத்திய மற்றும் மாநில திட்டங்களை நேரடியாக வழங்குதல் இதில் அடங்கும்.

31 மாநில கருவூலங்கள் மற்றும் 40 லட்சம் திட்டங்களை செயல்படுத்தும் முகமைகளின் ஒருங்கிணைப்பு மூலம் கூட்டுறவு கூட்டாட்சியை வலுப்படுத்துவதற்கு பிஎஃப்எம்எஸ் வழிவகுத்துள்ளது என்று திருமதி சீதாராமன் கூறினார். யூொது மற்றும் தனியார் துறை வங்கிகள் - தடையற்ற நிதி பரிமாற்றங்களை எளிதாக்கும் 650 நிதி நிறுவனங்களுடன் பிஎஃப்எம்எஸ் கட்டமைப்பு செயல்படுகிறது என்று மத்திய நிதி அமைச்சர் தெரிவித்தார். பிஎஃப்எம்எஸ் பரிவர்த்தனைகளின் அளவு 2015 இல் 2 கோடி செலுத்துதலில் இருந்து 2024 இல் 250 கோடியாக அதிவேகமாக உயர்ந்துள்ளது. யூோடக்க அமர்வைத் தொடர்ந்து சிறப்புரையை 16வது நிதி ஆணையத்தின் தலைவர் டாக்டர். அரவிந்த் பனகாரியா, "உலகளாவிய பொருளாதாரத்தில் இந்தியா: அடுத்த தசாப்தம் " என்ற தலைப்பில் ஆற்றினார்.